## எரிவாயு விலைத் தொல்லை எங்களுக்கு இல்லவே இல்லை



அடிக்கடி சமையல் எரிவாயுவின் விலை ஏறிக் கொண்டே இருப்பதால்.. இந்தியா முழுக்கவே எரிச்சலின் உச்சத்தில் இருக்கிறார்கள் பொதுமக்கள்! ஆனால், 'எரிவாயு என்ன விலைக்கு விற்றாலும். எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை என சந்தோஷத்தில் சிரிக்கிறார்கள், திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளம் அருகிலுள்ள சிவசுப்ரமணியபுரம் கிராம மக்கள்.

**செலவே இல்லை!**

இவர்களின் சந்தோஷத்திற்கு காரணம்.. சமையலறைக் கழிவுகளைக் கொண்டு எரிவாயு தயாரிக்கும் 'சக்தி சுரபி' என்ற எரிவாயுக் கலன்கள், கிராமம் முழுக்க இலவசமாக அமைத்துக் கொடுக்கப்பட்டிருப்பதுதான். கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரமும், சுஸ்லான் எனர்ஜி லிமிடெட் நிறுவனமும் இணைந்து, சோதனை அடிப்படையில் இப்படியொரு முயற்சியில் இறங்கியுள்ளனர்! விவேகானந்தா கேந்திரா, சமையலறைக் கழிவிலிருந்து எரிவாயு தயாரிப்பதை மக்களிடம் சிலகாலமாகவே பரப்பி வருகிறது. இதைப் பற்றி ஏற்கனவே 'பசுமை விகடன்' இதழிலும் எழுதியிருக்கிறோம். அடுத்தக் கட்டமாகத்தான் இத்தகைய்ப் புதுமுயற்சியில் இறங்கியிருக்கிறது. அந்த அமைப்பு.

இதைப் பற்றிப் பேசிய சிவசுப்ரமணியபுரத்தைச் சேர்ந்த நடராஜன், "நான் மளிகைக் கடை வைத்திருக்கிறேன். வீட்டில் சமைக்கும் பொழுது மிச்சம் வரும் கழிவு, கடையில் கிடைக்கும் அழுகின பழங்கள், காய்கறிகள் என்று எல்லாவற்றையும் கலனுக்குள் போட்டுவிடுவேன். அதன் மூலமாக கேஸ் உருவாகிவிடுகிறது. என் வீட்டில் இருக்கும் ஐந்து நபர்களுக்கும் சமைக்கத்

தேவையான கேஸ் இதன் மூலமாக கிடைத்துவிடுகிறது. இதைப் பயன்படுத்த ஆரம்பித்த நாளிலிருந்து கேஸீக்கான செலவே இல்லை.

அதே ஊரைச் சேர்ந்த சிவகாமி, “சக்தி சுரபியைப் பயன்படுத்த ஆரம்பித்த முதல் இருபது நாள் மட்டும் கலனில் மாட்டுச் சாணத்தைப் போட்டேன். அதறகுப் பிறகு வீட்டில் தினமும் கிடைக்கும் கழிவுகளை மட்டும்தான் போடுவேன். எங்க வீட்டில் ஆறு நபருக்கு சமைப்பதற்க்கு முழுக்க இந்த கேஸைத்தான் பயன்படுத்துகிறோம். அந்தக் கலனிலிருந்து வெளியில் வரும் பழிவு (சிலரி) நல்ல இயற்கை உரம் சேகரிச்சுக் செடிகளுக்கெல்லாம் கொடுக்கலாம். இந்தக் கலனை பயன்படத்த ஆரமபித்ததால் குப்பைகளே இல்லை என்றாகிவிட்டது. குப்பை இல்லாததால்.. ஈ, கொசுத் தொந்தரவும் இல்லை” என்று சொன்னார்.

சிவசுப்ரமணிபுரம் பகுதியைச் சேர்ந்தவரும், ஒன்றியக் கவுன்சிலருமான திரவியம், “சோதனை அடிப்படையில் முதல் கட்டமாக 29 வீடுகளில் சக்தி சுரபியை இலவசமாக அமைத்துக் கொடுத்திருக்காங்க. அருமையான பலன் கிடைத்திருக்கு. கலன் அமைத்த வீடுகளில் பைசா செலவில்லாமல் சமைத்துக் கொண்டிருக்காங்க. அடுத்தக் கட்டமாக எல்லாருக்கும் அமைத்துக் கொடுக்கப் போறாங்க, என்றார்.

சக்தி சுரபியை வடிவமைத்திருக்கும் கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரத்தின் இயற்கை வள அபிவிருத்தி மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ராமகிருஷ்ணன், சுஸ்லான் நிறுவனத்தின் நிதியுதவியுடன் சிவசுப்ரமணிபுரம் கிராம மக்களுக்கு சக்தி சுரபியைக் கொடுத்துள்ளோம்.

உலக அளவில் எரிபொருளுக்கான தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அதை ஈடு செய்யும் அளவிற்கு எரிபொருட்களை உற்பத்தி செய்ய முடிவதில்லை. அதனால் எரிபொருளுக்கு ஒரு மாற்று சக்தி மிகவும் அவசியமானதாகிவிட்டது. ஏற்கனவே சாண எரிவாயுக் கலன் உபயோகத்தில் இருந்தாலும், அதை கிராமத்தில் மட்டும் தான் பயன்படுத்த முடிகிறது. நகர மக்களும் பயன்படுத்தும் வகையில்தான் காய்கறி, உணவுக் கழிவிலிருந்தே எரிவாயு உற்பத்தி செய்யும் சக்தி சுரபியை உருவாக்கி உள்ளோம்.

வீட்டுப் புழக்கடை, மொட்டை மாடி.. என எங்கு வேண்டுமானாலும், அமைக்கலாம்.முதல் இருபது நாள் மட்டும் சாணம், தண்ணீர் இரண்டையும் 1:1 என்ற விகிதத்தில் சேர்த்து இந்தக் கலனில் இட வேண்டும். சாணத்தில் உள்ள பாக்டீரியாக்கள் மூலம் மீத்தேன் வாயு உற்பத்தியாகும். அதன் பிறகு. தினமும் வீட்டில் கிடைக்கக் கூடிய உணவுக்கழிவுகள், சமையலறைக் கழிவுகள் என அனைத்தையும் கலனில் இட்டாலே போதும், எரிவாயு உற்பத்தி ஆகிவிடும்.

ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கலனில் தினமும் 5 கிலோ கழிவுகளை இடுவதன் மூலம் ஒரு கன மீட்டர் வாயுவை உற்பத்தி செய்யலாம். நான்கு நபர்கள் உள்ள குடும்பத்திற்கு இது போதுமானது.

வீட்டுத் தேவைக்கு மட்டுமில்லாமல் உணவகங்களில் கூட இந்தக கலனை அமைத்துக் கொள்ளலாம். ஆரம்பக்கட்ட செலவு 14 ஆயிரம் ரூபாய். மரபு சாரா எரிசக்தித் துறை மூலம் இதற்கு 4 ஆயிரம் ரூபாய் மானியமும் கிடைக்கிறது. சிவசுப்ரமணிபுரத்தைப் பொருத்தவரை அரசு மானியம் போக, மீதமுள்ள பணத்தை சுஸ்லான் நிறுவனமே ஏற்றுக்கொண்டது" என்றார்.

**தொடர்புக்கு**
ராமகிருஷ்ணன், அலைபேசி : 94426 – 53975

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 25.7.11